


## கமிஷன்.. பினாமி டெண்டர்.. ஒருமையில் மோதல்!

# வேலூர் மாமன்றத்தில் திமுக கோஷ்டி மோதல் : 'பாகப்பிரிவினை' சண்டை!

## 2027 உள்ளாட்சித் தேர்தலில் எதிரொலிக்குமா?




**வேலூர், ஜூன் 24-**

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவடைவதையொட்டி, வரும் 2027ம் ஆண்டு மார்ச் மாதத்தில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த மாநில தேர்தல் ஆணையம் திட்டமிட்டு, வார்டு மறுவரையறை பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. இத்தகைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், வேலூர் மாநகராட்சியில் ஆளுங்கட்சியான தி.மு.கவுக்குள் வெடித்துள்ள கடுமையான உட்கட்சி மோதல்களும், கமிஷன் புகார்களும் தமிழக அரசியல் களத்தில் பெரும் பூகம்பத்தைக் கிளப்பியுள்ளன.

### மாமன்றக் கூட்டத்தில் வெடித்த திமுக மோதல்: ஒருமையில் வாக்குவாதம்!

வேலூர் மாநகராட்சியில் நிர்வாகக் குளறுபடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், நேற்று நடைபெற்ற மாமன்றக் கூட்டம் ஆளுங்கட்சியினரின் அடுக்கடுக்கான புகார்களால் போர்க்களமாக மாறியது. தி.மு.கவைச் சேர்ந்த பெண் மேயர் சுஜாதா மீது, அதே கட்சியைச் சேர்ந்த துணை மேயர் சுனில்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் கவுன்சிலர்கள் கடுமையான அதிருப்தியில் இருந்து வந்த நிலையில், அது அன்மையில் நடைபெற்ற மாமன்றத்தில் வெட்டவெளிச்சமானது.

### கமிஷன் கேட்கும் மேயர்

***மாமன்றக் கூட்டத்தில் பேசிய தி.மு.க துணை மேயர் சுனில்குமார்,***

"எனது வார்டில் கடந்த டிசம்பர் மாதமே டெண்டர் விடப்பட்டும் எந்தப் பணிகளும் நடக்கவில்லை. மாநகராட்சி நிர்வாகச் சீர்கேட்டிற்கு மேயர் தான் காரணம். பணிகளுக்கான ஆணை வழங்க மேயர் தரப்பில் கமிஷன் கேட்கப்படுகிறது" என்று சொந்தக் கட்சி மேயர் மீது பகிரங்கமாகக் கமிஷன் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

### ரூ.40 கோடிக்கு 'பினாமி' பெயரில் டெண்டர்

***இதற்குப் பதிலடி கொடுத்த மேயர் சுஜாதா,***

காட்பாடி தொகுதியில் துணை மேயர் சுனில்குமார் தனது 'பினாமி' பெயரில் ரூ.40 கோடிக்கு டெண்டர் எடுத்துவிட்டு சாலை அமைக்காமல் இருப்பதாகக் குற்றம் சாட்டினார். இருவருக்குமிடையே 'நீ, வா, போ' என ஒருமையில் கடுமையான வாக்குவாதம் முற்றியது. இதில் உச்சக்கட்ட வேடிக்கை என்னவென்றால், சொந்தக் கட்சியைச் சேர்ந்த தி.மு.க கவுன்சிலர்கள் ஒருவர்கூட மேயர் சுஜாதாவுக்கு ஆதரவாகப் பேசாமல் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தியதுதான்!

### முன்னாள் எம்.எல்.ஏவின் நிழல் ஆதிக்கம்?

மாநகராட்சிக்குள் நிலவும் இந்த மோதல் காட்பாடி மற்றும் வேலூர் தி.மு.க கோஷ்டிப் பூசலின் உச்சக்கட்டமாகும். கடந்த சட்டமன்றத் தேர்தலில் முன்னாள் தி.மு.க எம்.எல்.ஏ கார்த்திகேயன் தோல்வியடைந்த பிறகும், அவர் வெளியில் இருந்து கொண்டு மாநகராட்சி நிர்வாகத்தை ஆட்டிப்படைப்பதாகக் கூறப்படும் புகார்கள், அடிமட்டத் தொண்டர்களிடையே கடும் சோர்வையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தலைவர்களுக்கிடையேயான இந்த ஈகோ யுத்தம், தேர்தல் நேரத்தில் கட்சி வேலைகளைக் கடுமையாகப் பாதிக்கும் என உடன்பிறப்புகளே புலம்பத் தொடங்கியுள்ளனர்.

### த.வெ.க கண்டு பயப்படுகிறதா ஆளுங்கட்சி?

மறுபுறம், வேலூர் தொகுதி த.வெ.க (தமிழக வெற்றிக் கழகம்) எம்.எல்.ஏ வினோத் கண்ணன் மாமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களைக் கேள்வி கேட்பதைத் தவிர்க்கவே, சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கும் நாளில் மேயர் அவசரமாக மாமன்றக் கூட்டத்தைக் கூட்டினார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதிய வரவான த.வெ.கவின் சட்டமன்ற வரவைக் கண்டு ஆளுங்கட்சி அஞ்சுகிறதா என்ற பிம்பத்தை இது மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

### அதிமுகவின் அதிரடி முழக்கம்!

இந்தச் சண்டைகளுக்கு நடுவே, அ.தி.மு.க கவுன்சிலர்கள் எடப்பாடி பழனிசாமியின் புகைப்படத்தைக் கையில் ஏந்தி, "சுவற்றில் மாட்டுங்கள்" என முழக்கமிட்டுத் தனியே கவனத்தை ஈர்த்தனர்.

தி.மு.கவின் இந்த நிர்வாகச் சொதப்பல்களும் கமிஷன் விவகாரங்களும் அ.தி.மு.க மற்றும் த.வெ.க ஆகிய எதிர்க்கட்சிகளுக்கு அல்வா சாப்பிடுவது போன்ற வலுவான அரசியல் ஆயுதமாக மாறியுள்ளது.

### 2027 உள்ளாட்சித் தேர்தலில் திமுகவுக்குப் பலத்த பின்னடைவு?

திரைமறைவில் இருந்த தி.மு.கவின் உட்கட்சி மோதல்கள் மற்றும் கமிஷன் விவகாரங்கள் இப்போது தெருவுக்கு வந்துவிட்டதால், 'இந்தச் சாயம் வெளுத்த அரசியலை வைத்துக்கொண்டு தி.மு.க எவ்வாறு தேர்தலைச் சந்திக்கப் போகிறது?' என்ற விவாதம் பலமாக எழுந்துள்ளது.

வார்டு மறுவரையறை பணிகள் 11 மாவட்ட ஊராட்சிகள், 40 ஊராட்சி ஒன்றியங்கள் என விறுவிறுப்பாக நடந்து வரும் வேளையில், ஒரே நேரத்தில் தேர்தல் வரும்போது ஆளுங்கட்சியின் சாதனைப் பட்டியலை விட, இந்த 'கமிஷன்' மற்றும் 'பினாமி டெண்டர்' புகார்களே மக்கள் மத்தியில் ஆட்சி எதிர்ப்பு (Anti-Incumbency) அலையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த உட்கட்சிப் பூசலைத் தலைமை இப்போதே இரும்புக்கரம் கொண்டு ஒடுக்காவிட்டால், திமுகவின் கோட்டையா உள்ள வேலூர் மாநகராட்சி, தி.மு.கவின் கை நழுவிப் போகக் கூடும்! என்கின்றனர் அரசியல் ஆர்வலர்கள்.





